# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2243/20 - 2021 සැප්තැම්බර් මස 04 වැනි සෙනසුරාදා - 2021.09.04

*2243/20 ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2016* (II)

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2021, செத்தெம்பர் 04.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் *2021* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க, மருத்துவ (மருத்துவ உபகரணங்களுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2. (1)* ஆளொருவர், இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட விலையிலும் பார்க்க உயர்வான விலையில் அவ்வட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்தலாகாது அல்லது அதற்கான விதிப்பனவைச் செய்தலாகாது.

*(2)* அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட விலை, அந்த அவட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்துக்கான அதிகபட்ச சில்லறை விலையாக இருத்தல் வேண்டும்.


1A - G 34546 — 25 (2021/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆயின் எவ்வாறாயினும் சர்வதேசக் குறிப்பீட்டு விலைகளினதும் மற்றும் வேறு காரணிகளினதும் நியதிகளின்படி அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணத்தின் இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத் திகதியில் காணப்படும் சந்தை விலையானது, அதிகபட்ச சில்லறை விலையிலும் பார்க்க குறைவாகவுள்ளவிடத்து, அத்தகைய மருத்துவ உபகரணம் ஏதேனும் விலை அதிகரிப்பின்றி இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத் திகதியில் காணப்படும் விலையொன்றில் விற்பனை செய்யப்படுதல் வேண்டும்.

3. இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர், அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தின் வர்த்தகப் பொதியின் அல்லது அலகின் சுட்டுத்துண்டின் மீது அவ்வட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை வாசிக்கத்தக்க முறையில் அச்சிடுதல் வேண்டும் ; அல்லது அழிக்க முடியாத மையில் குறியிடுதல் வேண்டும்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர், இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்றினுள் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தின் ஏலவேயுள்ள கையிருப்பின் வர்த்தகப் பொதியின் அல்லது அலகின் சுட்டுத்துண்டின் மீது அதிகபட்ச சில்லறை விலையை அச்சிடுதல் வேண்டும் அல்லது குறியிடுதல் வேண்டும்.

5. அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது அதற்கான விதிப்பனவைச் செய்கின்ற ஆளொருவர், தனிவேறான விடயமொன்றாக அத்தகைய மருத்துவ உபகரணத்தின் வணிகப் பெயருடன் அல்லது அதுவின்றி அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு, பொதியளவு மற்றும் விலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

6. அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது அதற்கான விதிப்பனவைச் செய்கின்ற ஆளொவ்வொருவரும், துலாம்பரமானவோர் இடத்தில் அத்தகைய மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

7. அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணத்துக்கு ஒத்ததாகவுள்ள ஏதேனும் உபகரணத்தின் ஏதேனும் வணிகப் பெயருடன் அல்லது அதுவன்றி அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு, பொதியளவு என்பவற்றின் அதிகபட்ச சில்லறை விலையானது அவ்வட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையாக இருத்தல் வேண்டும்.

8. ஒரு மருத்துவ உபகரணத்தின் ஏதேனும் வணிகப் பெயருடன் அல்லது அதுவின்றி அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு அல்லது பொதியளவு அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்படாதவிடத்து, அவ்வாறு குறித்துரைக்கப்படாத மருத்துவ உபகரணத்தின் வணிக அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு அல்லது பொதியளவு என்பனவற்றுக்கான அதிகபட்ச சில்லறை விலையானது, 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அறிமுக விலையாக இருத்தல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

10. இவ்வொழுங்கு விதிகளில் -

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்.

அட்டவணை

(ஒழுங்குவிதி 2)

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | மருத்துவ உபகரணத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெயர் | ஓர் அலகுக்கான அதிகபட்ச சில்லறை விலை (அசிவி) (இரு) |
| 1. | பிங்கரிப்ஸ் பல்ஸ் ஒக்சிமீட்டர் | ரூபா 3,000.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.